**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.600/2018**

**Prosecution Witness : 12**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : வெங்கடேஷ் | **Caste** | : | |
| **Father's Name** | : ராமசாமி | **Calling** | : | தனியார் நிறுவன ஊழியர் |
| **Village** | : நத்தம் | **Religion** | : | |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : | **44/2026** |
| | | **Dated** | : | **17.06.2026** |

**17.06.2026**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 3 **திரு. வெங்கடேஷ்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா.** 12 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**2 ம் எதிரி ஆஜர்.1 எதிரி ஆஜர் இல்லை . U/s.355 of petition filed and allowed.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் திண்டுக்கல் நத்தத்தில் குடியிருந்து தனியார் துறையில் வேலை செய்துவருகிறேன். நான் எனது மனைவி ராஜலெட்சுமிக்கும் எனக்கும் மற்றும் என் நண்பர்களுக்கும் அரசு வேலை வாங்கித்தர எனது மாமா முருகேசன் என்பவர் மூலம் எனது மாமாவின் நண்பரான சாந்தா தேவியிடம் பல்வேறு தவணைகளில் ரூ.17,00,000/- யை சாந்தாதேவி வீட்டில் வைத்து எனது மாமா முருகேசன் முன்னிலையில் ரொக்கமாக கொடுத்தோம்.

எனக்கு கால் நடை உதவியாளர் வேலையும் எனது மனைவிக்கு ஆய்வக உதவியாளர் வேலையும் வாங்கித்தருவதாக கூறினார்கள். ஆனால் வாங்கித்தரவில்லை. பிறகு நாங்கள் பணத்தைத்திருப்பிக்கேட்டோம். தருவதாக சொன்னார் . ஆனால் தரவில்லை. அதனால் காவல் நிலையத்தில் புகார் அளித்தோம்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

எந்த தேதியில் DCB காவல் நிலையத்தில் எங்களை விசாரித்தார்கள் என்றால் ஞாபகம் இல்லை. நான் முதல் விசாரணையில் சொன்னதைத்தான் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அரசு போக்குவரத்து கழகத்திலோ, அல்லது மின்சாரத்துறையிலோ அல்லது எந்த அரசாங்க வேலைக்கும் எம்பிளாய்மெண்ட மூலமாகவோ அல்லது TNPSC மூலமாகவோ அல்லது கருணைஅடிப்படையில் வேலை மூலமாகவோ சேரமுடியும் என்றால் சரிதான்.

வேறு எந்த வகையிலும் யார் மூலமாகவும் அரசாங்க வேலை வாங்க முடியாது என்றால் சரிதான்.சாந்தாதேவி இருவரும் எந்தவிதமான அரசுப்பணியில் இல்லை என்றால் சரிதான்.முருகேசன் எனது தாய்மாமா என்றால் சரிதான். எதிரிகளை நேரடியாக எனக்கு பழக்கம் இருக்கிறதா என்றால் பழக்கம் இல்லை. நான் பணம் கொடுத்தற்கு எந்தவித ஆதாரமும் இல்லை என்றால் சரிதான். மேற்படி நான் கொடுத்த பணத்திற்கான Source of income பற்றி போலிசார் விசாரணையிலோ முதல் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். அப்போதைய அமைச்சர் விஸ்வநாதனின் எதிரியான 2ம் எதிரியின் மீதுள்ள விரோதத்தின் பெயரில் அப்போதைய ஆளுங்கட்சி தூண்டுதலின் பெயரில் இந்த புகார் என்னால் ஜோடிக்கப்பட்டு கொடுக்கிறேன் என்றால் சரியல்ல.

அப்போதைய அமைச்சர் விஸ்வநாதனின் தூண்டுதலின் பொய்யாக நான் சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாணையில் சொன்னது போல் சாந்தா தேவியை சந்திக்கவில்லை என்றாலும் அவரிடம் நான் எந்த பணத்தை கொடுக்கவில்லை என்றாலும் நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

**இல்லை**

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C

Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.06.17 15:26:53 +0530

Judicial Magistrate No.II
Dindigul.